கலாசிந்தாமணி

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

—திருக்குறள்.

புத்தகம்	காளயுக்தி ௵ ஆவணி ௴	சஞ்சிகை.
3	ஜுலை ௴ 1918	11

கடவுள் வணக்கம்

இன்னமுதுகனிபாகுகற்கண்டுசீனிதே
னென்னருசித்திடவலியவந்
தின்பங்கொடுத்தநினை யெந்நேரமின்னன்ப
ரிடையறாதுருகிநாடி
வுன்னியகருத்தவிழ வுரைகுளறியுடலெங்கு
மோய்ந்தயர்ந்தவசமாகி
யுணர்வரியபேரின்ப வனுபூதியுணர்விலே
யுணர்வார்களுள்ளபடிகாண்
கன்னிகையொருத்திசிற்றின்பம்வேம்பென்னினுங
கைக்கொள்வள்பக்குவத்திற்
கணவனருள்பெறின்முனே சொன்னவாறென்னெ
னக் கருதிநகையாவளதுபோற்
சொன்னபடிகேட்குமிப் பேதைக்குநின்கருணை
தோற்றிற்சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க்குணமான பரதெய்வமேபரஞ்
சோதியேசுகவாரியே.

—தாயுமானவர்.

1336-ஹு ஷவ்வால்மீ 1918-ஹு ஆகஸ்டு—செப்டம்பர்மீ

காளயுக்தி ஹு ஆவணி மீ

		கே.	குரு.
	25-சி-சனி-		சனி சுக்
			புத. சூரி
	ரா கு	செ	

தக்ஷிணாயணம் சருது	பசலி 1327 1328	சாலி 1840
கொல்லம் 1093.	கலியுகம் 5019	ஹிஜரி 1336

யோ	ஹி	இங் மீ.	தமிழ் மீ.	வாரம்.	திதி, நக்ஷத்திரம், முதலியன.
சி	9	17	1	சனி	தச-22-10, கேட் 19-29, ரா 8-41, சூன்யதிதி
அ	10	18	2	ஞா	ஏகா 22-20, மூல 21-25, தி 17-17, ரா 17-37
உ	11	19	3	திங்	துவா 21-15, பூரா 22-6, ரா 10-35.
பி	12	20	4	செ	திர 18-57, உத்தி 21-39, ரா 0-3.
சி	13	21	5	புத	சதுர் 15-38, திருவோ 20-5, தி 29-43.
சி	14	22	6	வியா	○ பருவம் 11-25, அவி 17-56, ரா 5-18.
சி	15	23	7	வெ	பிர 6-25, சத 14-32, தி 29-33.
ம	16	24	8	சனி	துவி 0-51, திரி 54-6 பூர 10-51, ரா 2-1.
அ	17	25	9	ஞா	சௌ 48-46, உத்திரட் 6-18, ரா 3-32.
சி	18	26	10	திங்	பஞ் 42-38, ரே 2-37, அசு 55-51, ரா 20-12
சி	19	27	11	செ	ஷஷ் 36-42, பர 54-31, தி 20-56.
அ	20	28	12	புத	ஸப் 31-13, * கிரு 51-9, தி 22-55,
உ	21	29	13	வி	அஷ் 26-22, ரோ 48-27, தி 29-21, கிருஷ்
சி	22	30	14	வெ	நவ 22-18, மிரு 46-40 தி 2-2. [ணஜயந்தி
சி	23	31	15	சனி	தச 19-9, திருவா 45-45, தி 7-20.
சி	24	1	16	ஞா	ஏகா 17-52, புனர் 46-0, தி 15-52.
சி	25	2	17	திங்	துவா 16-13, பூசம் 47-29, தி 6-29. [ராத்ரி.
சி	26	3	18	செ	திர 16-39, ஆயி 50-11, தி 20-55 மாசசிவ
சி	27	4	19	புத	சது 18-21, மக 54-5, தி 22-8, அமாவாசை.
சி	28	5	20	வியா	● அமா 21-14, பூரம் 59-5.
சி	29	6	21	வெ	பிர 25-9, உத்தி 60-0, தி 19-13.
உ	1	7	22	சனி	துவி 29-51, உத்தி 5-13, தி 28-27.
அ	2	8	23	ஞா	திரி 34-57, ஹஸ் 11-36, ரா 3-10. [ர்தி.
பி	3	9	24	திங்	சௌ 40-6, சித் 18-17, ரா 3-6, விநாயகசது
சி	4	10	25	செவ்	பஞ் 44-44, சுவா 24-21, ரா 9-5 ருஷி பஞ்
சி	5	11	26	புத	ஷஷ் 48-38, விசா 29-55, ரா 10-4. [சமி.
சி	6	12	27	வி	ஸப் 51 28 அனு 34-32, ரா 18-50.
ம	7	13	28	வெ	அஷ் 53-5, கேட் 38-1, ரா 28-17, மிருத்தி
சி	8	14	29	சனி	நவ 53-20, மூல 40-13, ரா 5-38. [யோகம்
சி	9	15	30	ஞா	தச 53-21, பூரா 41-12, தி 4-36.
ம	10	16	31	திங்	ஏகா 50-9, உத்தி 40-59, தி 1-8, ரா 20-23.

அன்பு

"அன்போடியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போடியைந்த தொடர்பு."

அரிய ஆன்மாவானது உடம்போடு கூடி யல்லாமல் அன்பு செய்யக் கூடாமையால், அது (அன்பு) செய்தற் பொருட்டே இத்தொடர்ச்சி யுண்டாயிற்றென்பது , இக்குறளின் கருத்து. ஆகையால், இத்தகைய விசிட்டம் பொருந்திய அன்பைப்பற்றி இப்பத்திரிகையிற் சில எழுதுவல். குடத்துள் விளக்குந் தடத்துள் வாளும்போல இதுதான் அன்பென்று தந்து காட்டலாகாது: அன்புடையார் மாட்டுக் காணவேண்டியது; உண்மை மாத்திரம் உணர்த்தப்படக் கூடியதேயன்றிப் பிழம்புணர்த்தப் படமாட்டாதது.

"ஒப்பு முருவும் வெறுப்பு மென்று
கற்பு மேரு மெழிலு மென்று
சாயலு நாணு மடனு மென்று
நோயும் வேட்கையு நுகர்வு மென்றுங்
காவயின் வரூஉங் கிளவி யெல்லா
நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
காட்ட லாகாப் பொருள வென்ப."

ஆகையால் இது சுட்டிக் காண்பிக்கக் கூடியதல்ல. இத்தகைய அன்பு ஒருவரிடத்து அன்னாரின் பக்குவமிகுதிக் கேற்பத்தங்குவது. நிறைந்த அன்புஒருவரிடத்திருக்குமாயின் அவர் சிவமாந்தன்மை யெய்துவர். தமக்கென ஒருருவுமின்றிய ஈசன், ஆண்மாக்களில் வைத்த நேசத்தானே கருணை ரூபங்கொள்வர். கடவுள் ஆண்மாக்களில் வைக்கும் அன்பு கருணையென்று சொல்லப்படும். பூரண அன்பு அமையப்பெற்ற ஒருவர் கடவுட்டன்மை பொருந்தியவரன்றோ?

"அன்பு சிவமிரண்டென்ப ரறிவிலார்
அன்பு சிவமாவ தாரு மறிகிலர்
அன்பு சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே."

என்னுந் திருமூல யோகிகள் திருவாக்கு இவ்விடம் எடுத்தாளுவது எவ்வளவு பொருத்தமுடையது. அன்பில்லாத ஆன்

மாக்கள் உலகில் இல்லவேயில்லை. ஆகையால் இதனை உயிர்க் குணங்களிலொன்று என்று சொல்லலாம். கோவதை செய்யுங் கொடிய நெஞ்சினனும், ஈரமில்லாத கல்நெஞ்சனென்று எல்லாராலும் இகழ்ந்திடப்படினும், தன்னினிய மனைவி மக்கள் திறத்து அன்போடொழுகுதல் கண்கூடே. அவனிடத்துள்ள அன்பு அவனிடத்தும் அவனது மனைவி மக்களிடத்தும் ஏகதேசத்தில் மாத்திரம் அடங்கும். இவனிற் சிறிது தாழ்ந்த நிலைமையினையுடைய சிங்கம், புலி, கரடிகளிடத்தும் தம்மளவில் ஒரு சிறிது அன்புண்டு. இனி, உத்தம விலக்கணத்தையுடைய அன்பு இன்னதென ஆராய்வாம்.

> "சாவிற்சாத னோவி னோத
> லொண்பொருள் கொடுத்த னன்கினிது மொழிதல்
> புணர்வு நனிவேட்டல் பிரிவுநனி யிரங்கல்."

என்பன அன்பின் விசேடமே. ஆயினும் இவை தாமும் உண்மையான உழுவலன்பாக மாட்டா. ஏன்? "பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள், இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும் பெறும். இனிக்கண்டீரன்றே, குடுமிக் கூந்தலில் நறுநெய்பெய்து கொண்டானிற் பின்னையுமிருந்து சோறுதின்று வாழ்கின்றாள்! ஓ! கொடியளே காணென்று நித்தல் பழிதூற்றப்பட்டிருந்து பின்னுமே ஒரு நாட்சாவன், அதனான் இன்றே சாவனெனச் சாவவும் பெறும். அதுவன்றிப் புகழ்வேண்டிச் சாவவும்பெறும். கணவனோடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அது வேட்கையாலும் சாம். அஃது ஒரு தலையாக நிகழ்வதன்றென்பது. இனி நோவின் நோதல் என்பது இன்ன நோவு என்றிறயலாகாது. அதுவுந் திரிவுடைத்து. அன்புள் வழியும் அன்பில் வழியும் தோன்றுமென்று மறுக்கப்படும். ஒண்பொருள் கொடுத்தலென்பது, கணிகையர் கூட்டம் பொருளானன் ஆம். ஆதலின் அதுவும் அன்பன்று. நன்கினிது மொழிதலென்பது, நன்கினிது சொல்லிப் பகைவருந் தங்கருமம் முடிப்பாராகலின் அதுவும் அன்பன்று. புணர்வு நனிவேட்டலென்பது, அச்சங்காரணத்தாலும் புணர்வு வேட்டார் போலப் புணர்வர். பிரிவு நனியிரங்கலென்பது, நீருமாடார், பூவுஞ்சூடார், சாந்துமணியாராய்ப் பிரிந்திருந்தார்போல வாடியிருப்பர். அன்பிலாதாருமாகலின் அதுவுந் திரிவுடைத்து. இனித்திரிவின்றி இக்குணங்கள் நிகழ்ந்த

வழி அன்புண்டெனக் கொள்க," என்று இறையனார் அகப்பொருளுரை சொல்வதால் என்க. ஒரு ஆடவன் தன்னுடைய மனைவி இறக்க அதிகந் துக்கப்படுகிறான். மூன்று மாதத்துக்கு வெளிவராது இருக்கிறான். இப்படிச்செய்யும் இவன், தன்னுடைய மனைவியிற் சிறிதும் அன்பில்லாது இருப்பினுமிருப்பன். தன்னினிய மனைவி யிறக்கத்தனக்கு இனிச்சுகமில்லையேயென்று வருந்தும். கூடியிருந்த காலத்தில் அற்பகுற்றத்துக்கு அவள் மனம் நோக அதிகந் தண்டித்த அநியாயத்தைக் குறித்து வருந்தும். அயலவர்கள் இவன் தன்மனைவியில் மிகுந்த காதலுள்ளவனென்று கருதி மீண்டும் ஒரு கன்னிகையைக் கொடுக்கட்டும் என்று அழுதல் விழுதல் முதலாகிய கபடநாடகம் திறமையுடன் நடித்துக் காட்டும். இப்படியெல்லாம் வருந்தும் நமது சகோதரர்கள், தம்மனைவியரிறக்க நேரின், மறுமணம் வசதி வந்தும் முடியாது பிறநாரியரைப்பாராதும் இருப்பார்களாயின், அவர்கள் தம்மனைவியரில் உண்மையான அன்பு வைத்திருந்தாரென்று சொல்லலாம். (இன்னும்வரும்)

பொ. நடராஜன், மேலைப்புலோலி.

சைவ சமய பக்த சிரோன்மணிகள்.

அரிதினு மரிதான யாக்கையைப் படைத்த மானிடராகிய நம்முன் 'கடவுளைக்கண்டதுயார்? கடவுளேஇல்லை' என விதண்டாவாதம் பேசி நாத்தழும்பேரி உழலாநிற்பர் சிலர். அந்தோ அவர்களின் அறியாமை என்னே!! ஒரு சிறிய கருமமும் செய்பவரின்றி முடியாதெனின் இவ்வகண்ட ப்ரபஞ்சத்தையும் இதிலுள்ள ஏனைய ஜீவ வர்க்கங்களையும் படைத்தவர் ஒருவரிருக்க வேண்டுமல்லவா? அவர்தான் கடவுள். இப்பூவுலகிலுள்ள மதங்களெல்லாம் அக்கடவுளைக் கண்டறிதற்குரிய சாதனங்களாம். புண்யபூமியாகிய நம் பரதகண்டத்தில் பல மதங்கள் தோன்றி க்ஷீணித்துப்போய்விட்டது அவ்விதம் க்ஷீணிக்காது யிருந்து வருவதினாலேயே, பழமையான மதமான சைவசமயத்தின் மாட்சி இனிது விளங்கும். சைவசமயம் இக்காலத்தில் தான் ஏற்பட்டது எனக் கணக்கிடமுடியாதது. உலகம் ஏற்பட்டது முதலிருந்துவரும் மதமெனப் புலப்படுகிறது. 'சைவத்தின்மேற் சமயம் வேறிலை' என்று நம் ஆன்றோர் மொழிந்துளார். இச்சம

யத்தில் கடவுளை ஆசித்து பரந்தாமத்தை எய்தியவர்கள் அநேகர். சைவசமயத்தை மேன்மை யடையச்செய்த பக்தசிரோன்மணிகளாகிய நால்வர்களில்லாவிடின் மதம் க்ஷீணித்துப்போயிருக்கும் என்பது 'சிவானந்தமாலை'யிலுள்ள 5-ம் திருவெண்பாவாகிய சொற்கோவும் * தோணிபுரத்தோன்றலுமென் சுந்தரனுஞ், சிற்கோலவாதவூர் தேசிகனு முற்கோலி; வந்திலரேனீறெங்கே மாமறை நூலெங்கே; எந்தைபிரானைந் தெழுத்தெங்கே" என்பதால் நன்கு புலப்படும். பற்பல அற்புதங்கள் புரிந்து பரசமயங்களைவென்று சற்சமயமாகிய சைவசமயத்தை ஸ்தாபித்து ஆன்மாக்களுய்யும்பொருட்டு வேதசாரமாகிய தேவாரம் முதலிய தமிழ்வேதம் செய்தருளிய சமயாசாரிகள் நால்வரின் சரிதையை எழுத முன்வந்திருக்கும் என்மீது கிருபையுடன் இதைப்படிக்கும் பெரியோர் இதிலுள்ள குற்றங்கணீக்கிக் குணங்கொண்டொழுகப் பிரார்த்திக்கிறேன்.

"காழிநகர்ச்சிவபாதவிருதயர்தந்த, கவுணியர் கோனமுதுமையாள்கருதியூட்டு; மேழிசையின் முண்டுதாளம்வாங்கி,யிலங்கியநித்திலச்சிவிகை யிசையவேறி: வாழுமுயலகனற்றிபந்தரேய்ந்து, வளர்கிழிபெற்றரவின்விட மருகற்றீர்த்து; வீழிநகர்க்கர செய்திமறைக்கத் தவம்பிணித்து, மீனவன் மேனியின்வெப்பு விடுவித்தாரே.'

—ச-தேவாரம்.

2 "ஆறெரி யிட்டெடுத்தவேடவை முன்னேற்றி,
யாற்றிலிடுமே டெதிர்போயணையவேற்றி:
யோரமணரொழியாமே கழுவிலேற்றி
யோதுதிருப்பதிகத் தாலோடமேற்றிக்:
காருதவுமிடி புத்தன்றலையிலேற்றிக்,
ரயாதபனையின் முதுகனிகளேற்றி;
·லிலாவங்க முயிரெய்தவேற்றி,
நபெருமணத்தானை யெய்தினரே."

—பெரியபுராணம்.

ஈழமண்டலத்தில் எஞ்சலில் சிறப்பும் மிஞ்
ஷிபுரமெனப்பட்ட சீர்காழியம்பதியிலே

·நாவுக்கரசும்; தோணிபுரத் தோன்ற
ப்பந்தரும்.

பிராமணர்குலத்தில் மிகக் கல்விமானுகிய சிவபாதவிருதயர்என் பவருக்கும் அவர் தம்மனைவியாராகிய பகவதியாரென்பவருக் கும் தோணியப்பரருளால், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமி கள் திருவாதிரை நக்ஷத்திரத்தில் திருவவதாரம் செய்தார். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக குழந்தை வளர்க்கப்பட்டு வந்தது. சிறு குழந்தையா யிருக்கும்பொழுது தந்தை ஸ்நானம் செய்யப்போம்பொழுது குழந்தையையும் தூக்கிப்போய் சிவாலயத்தினுள்ளிருக்கும் தீர்த்தக்கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். குழந்தை யானது தன் முற்சார்பை அறிந்து திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து கரங்களிரண்டையும்நீட்டி அழவாரம்பித்தது. பெருங் கருணைத் தடங்கடலாகிய தோணியப்பர் திருவருள் செய்யவு ளங்கொண்டு பார்வதி தேவியரோடும் இடபாரூடாய் எழுந்த ருளி தீர்த்தக்கரையை அடைந்து உமாதேவியின் முலைப்பாலை பொற்கிண்ணத்திலே கறந்து சம்பந்தருக்கு அளிக்கும்படி செய்தார். இந்திராதி தேவர்முதல் முனிவர்களுக்கும் எட்டாத சத்திய நிர்மலஞானத்துடன் சம்பந்தம் செய்தலால் 'ஞானசம் பந்தர்' என அவருக்கு காரணப் பெயர்கிடைத்தது. ஸ்நானத் தை முடித்துக்கொண்டுகரையேறிய சிவபாதவிருதயர்குழந்தை பாலுண்டிருப்பதைக் கண்டு கோபங்கொண்டு 'நீயார் தந்த பாலை உண்டாய்' என கையில் ஒரு சிறிய மாறுகொண்டு ஓச்ச சுவாமிகளாகிய குழந்தை ஒரு திருக்கை விரலினாலே ஆகாயத் திலே இடபாரூடராய் உமாதேவியுடன் விளங்கிய பரமேசுவர னைக் காட்டி அன்பின் பெருக்கால்,

'தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி யெனுள்ளங்கவர்கள்வ
னேடுடைய மலரான்முன் நாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே'.

என வாரம்பித்து பத்துபண்கள்பாடி யருளினர். இவ் வற்புதத்தைக் கண்ட அடியார் பலரிவரை வந்து தரிசித்துப் போனார்கள். பிறகு திருக்கோலக்கா, திருக்கழுமலம், திருநனி பள்ளி, தலைச் செங்காடு திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச் சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், மயேந்திரப்பள்ளி, குருகாவூர் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து பதிகங்கள்பாடி யருளினர். பிறகு சீர்காழியை அடை

ந்திருக்கும்பொழுது திருவெருக்கத்தம்புலியூர் வாசியான திருநீலகண்டப் பெரும்பாணர்வந்து காண அவருடன் சுவாமிகள் தேவாலயத்திற்குச் சென்று தரிசனம்செய்த பின்னர் பாணருக்கு யாழ்வாசிப்பதிலுள்ள திறமையைக்கண்டு மகிழ்வெய்தினர். பாணர் சுவாமிகள் பாடும்பாட்டை யாழில்வாசித்துக் கொண்டு பிரியாமலிருக்க ஆர்வம்கொள்ள அவ்வாறே இருக்க சுவாமிகளும் சம்மதித்தார். (தொடரும்.)

எஸ். தண்டபாணி, பட்டுக்கோட்டை.

ஆன்மாக்களுக்கு ஓர் வேண்டுகோள்

பரதகண்ட வாசிகாள்! உலகில் நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும் உள்ள எண்பத்து நான்குலக்ஷ யோனி பேதங்கள் உண்டு. நால்வகைத் தோற்றங்களாவன; அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம் முட்டையில் தோன்றுவன, சுவேதசம் வேர்வையிற்றோன்றுவன, உற்பிசம் வித்துவேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன, சராயுசம் கருப்பையில் தோன்றுவன. எழுவகைப் பிறப்புக்களாவன; தேவர் மனிதர் விலங்கு பரவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பவைகளாம். முட்டையினின்று இருபத்தொரு லட்சம் பரவைகளும் பூமியினின்று இருபத்தொரு லட்சம் மர முதலியவைகளும் கருப்பையினின்று இருபத்தி ஒருலட்சம் தேவர் மனிதர் முதலானவர்களும் வேர்வையினின்று இருபத்தொரு லட்சம், கொசு முதலியவைகளும் தோன்றுவனவாகும். எல்லாச்சன்மங்களிலும் மானிட சென்மம் கிடைப்பது அரிது. அதாவது ஒருபொருளை பார்க்க கண்ணும், பலவித புராணங்களைகேட்க செவியும், இனிமையையுணர நாவும், துர்க்கந்தங்களையறிய நாசியும், சிற்றின்பமாகிய காமவின்பத்து மெய்யும், நன்மை தீன்மைகளை பகுத்துணர உணர்வுமுண்டு. ஆனபடியால்மானிடஜென்மமேசிறப்புடையதாகும். இம்மானிட சென்மத்தில் நான்கு வருணத்தாருளர். அவையாவன; பிராமணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் என நான்காம். பிராமணருக்கு உரிய தொழில்களாவன தானங்கொடுத்தலும் தானமேற்றலும் யாகம் செய்தலும் யாகம் செய்வித்தலும் வேதமோதலும் வேத மோதுவித்தலும் ஆகிய ஆறும் பிராமணர்களுக்கு உளவாம். க்ஷத்திரியருக்கு உரிய

தொழில்களாவன; வேதமோதலும் யாகஞ் செய்தலும் தானங் கொடுத்தலும் பூமியைக் காத்தலும் யானை குதிரை தேரூர்தலும் படைக்கலம் பயிலலும் ஆகிய இவைஆறுமாம். வைசியருக்கு உரிய தொழில்களாவன. வேதமோதலும் யாகஞ் செய்தலும் தானங் கொடுத்தலும் பசுக்காத்தலும் வாணிகஞ் செய்தலும் பயிரிடுதலும் ஆகிய இவையாறும். சூத்திரருக்கு உரிய தொழில்களாவன; பயிரிடுதலும் வாணிகஞ் செய்தலும். பசுக்காத்தலும் முதன் மூன்று வருணத்தாருக்கும் அனுகூலமாகிய தொழில்களைச் செய்தலும் ஆகிய நான்குமாம். இம்மானிடரில் பிராமணர் சிரேஷ்டர் அதினும் வேதசாஸ்திர முணர்ந்தவர் மிக சிரேஷ்டர். உணர்ந்த வழி விதிவழியிலேயே நிற்பவர் அதினிலும் மிக சிரேஷ்டர். அதிலும் பிர்மஞான மடைந்தவரே மிக சிரேஷ்டர். அநேககோடி சன்மங்களாலே பெறப்படுவனவாகிய சுவர்க்க மோட்சங்களை அடைவதற்கு மானிட சென்மமே காரணமாகியது. இச்சன்மத்தை யடைந்தும் நல்வினை செய்து நல்லுலகம் பெறாமல் நரகம்புக தீவினைகளைப் புரிந்து இச்சன்மத்தை வியர்த்த மாக்குவோர் உலகில் பலருளர். புண்ணியத்தால் கிடைத்த மானிட ஜென்மத்தைப் பெற்று, மண்ணாசை பெண்ணாசை பொருளாசையாகிய இவற்றின்மேல் இச்சை வைத்து தருமங்களைப் பண்ணாமல் உழல்பவன் யாவனோ அவனே மிருகங்களோ டொப்பவனன்றி நன்மக்களோடு சேரான். ஆசைப் பெருக்கத்திற்கோர் அளவில்லை. எவ்வளவு கிடைத்தாலும் இன்னம் வேண்டும் வேண்டு மென்று அலைவானே அல்லாமல் கிடைத்த மட்டில் திருப்தியடையான். நூறுபொன்பெற்றானேல் அவன் திர்ப்த்தி யடையாமல் ஆயிரம் பொன்னை யிச்சிக்கின்றான். ஆயிரம்பொன் னடைந்தவன் லட்சம் பொன்னை யிச்சிக்கின்றான். லட்சம்பொன் னடைந்தவன் ஒருதேசத்தை விரும்புகிறான். தேசமடைந்து அரசனாகியவன் புவிமுழுதுக்கும் யேகசக்கரவர்த்தியாக விரும்புகின்றான். சக்கரவர்த்திதேவனாக விழைகின்றான். தேவர்களோ இந்திரனாகவிரும்புகிறார்கள். இவ்விதம் இச்சை மேல்மேலும் பெருகுமேயன்றி அதுஒருவருக்கும் ஒழியாது. இந்த இச்சையை ஒழிக்காதவர்கள் யாவராலும் இகழப்பட்டு நரகத்துக்கே ஆளாவர்.

நன்பர்காள்! கலைமான் புல்லாங்குழலின் இசையக்கேட்டு இருப்பிடம் விட்டுபோகாமல் இருந்து வேடனால் பிடிக்கப்

படுதலால் அக்கலைமான் தன் செவியால் கெடுவதாகும். யானை புணர்ச்சியை விழைந்து பெண்யானையைத் தொடர்ந்து சென்று யானைப்பாகர்கள் தோண்டிய குழியில் விழுதலால் அவ்யானை பரிச இன்பத்தால் கெடுவதாகும். விட்டிற்பூச்சி விளக்கைக்க ண்டு நல்ல கனியென்றுநினைத்து வீழ்ந்து அவ்விளக்கினில் சாகி ன்றமையால் அப்பூச்சி கண்ணால் கெடுவதாகும். வண்டு உண்ண க்கருதி இரவில் தேனைச்சேர்த்து அதிலிருக்கும்போது நறுந் தேன் கொள்பவன் தீயால் கொளுத்து கின்றமையால் அவ்வ ண்டு நாவால் கெடுவதாகும். மீன் தூண்டிலின் முனையில் கோர்த்த இறச்சியின் நாற்றத்தை விரும்பி உயிர் நீப்பதால்அம் மீன் நாசியால் கெடுவதாகும். வஞ்சனையை யுடைய மனிதன் பிறர்சொத்தை அபகரித்தும் நல் வழியில்நடக்காமலும் தருமம் செய்யாமலும் தான் உண்ணாமலும் மனதார உரவின்முறையார் களுக்கு கொடாமலும் பெண்டு பிள்ளையையும் தான் அபகரித்த திரவியங்களையும், வீடு யாவரும் பார்த்திருக்க சொல்லாமலே மாள்கின்றான். தாய்தந்தையர் பெண்டுபிள்ளைஒருவரும் துணையி ன்றி தானொருவனாகவே எவ்விதம் வந்தானே அவ்விதம் அவன் மாத்திரம் தனியேபோகின்றான். ஒருவன் மறித்தவுடன் அவன் தேகத்தை * காஷ்டம்போலப் புவியில் கிடத்தி உரவினரெல் லோரும். ஆ! ஆ! வென்று அலரியழுதமையால் மறித்தவன் அடையும் பயன் யாதுளது, பொய்பத்திர மெழுதுதல், பொய் சாக்ஷி கூறல், பொய் வழக்குரைத்தல் வழிப்பரித்தல் கொலைபுரி தல் முதலிய தீயதொழில் செய்து பொருள் சம்பாதித்து பாவ த்தைக் கொண்டவன் எவனோ அவனொருவனே தீவாய் நரகம் புகுவான்.

அதுநிற்க தீய தொழில் புரிந்து அபகரித்தப்பொருள்மறி த்தபின் அவனோடு சேருமோ வென்றால் ஒரு சிறிதும் சொல் லாமல் அவன் இல்லத்தின் கண்ணேயிருந்து உரவின் முதலி யோரே சவத்தோடு மயானத்தளவுங்கூட சென்று உடனே மீள்வார்கள். இறக்கு முன்னமே அவன்செய்த பாவபுண்ணியம் அவனுடன் செல்வதாகும்.

சீருடன் வருந்தித் தேடுந்திரவியம் பதியுஞ்செல்லா
தூருடன் பிறவுங்காடு மட்டினிலுடன் போய்மீள்வர்

---

* மனிதருடன் இறந்தவுடன் காஷ்டம். பிணம்.

பாரினில் வாழுநாளில் பண்ணிய பாவநன்மை
கூருடன் போந்தராம கணையென கூடப்பேமோ.

—நீதிசார-வெண்பா.

ஆதலால், ரோகத்தால் பீடிக்கப் படுவதற்கு முன்னரும் வயோதிகம் வருவதற்கு முன்னரும் செயல் ஒடுங்குவதர்க்கு முன்னரும் ஆயுசு குறைவதர்க்கு முன்னரும், இவைகளைத்தெரிந்தவன் தான் அந்தியகாலத்தில் நல்லுலகு புகுவதற்கு நல்வினைகளைச் செய்வான் அப்படிச் செய்யாமல் பின்னிட்டு செய்வோமென்று ஆலோசிப்பது தீப்பற்றி இல்லம் எரியும் காலை அதனை அவிப்பதற்கு கூபம்தோண்ட எத்தனிப்பதை ஒப்பாகும். ஆகையால்இச்சன்மத்திற் தானதருமங்களைச்செய்தவனே, மறுசென்மத்தில் மகாபாக்கியவனாகின்றமையின், அச்சென்மத்திலும் அப்படியே செய்தால் மறுசென்மத்தில் அதிக தனவானாகின்றான். யாவன் அத்தான தருமங்களைப்பக்தி சிரத்தையோடுசெய்கின்றானோ அவனே தருமார்த்த காமமோக்ஷங்களைப்பெறுவன். பக்தி சிரத்தையின்றி செய்தவன் செய்யாதவனே ஆகும். பக்தியோடு செய்யும் தர்மம் தினையினும் சிறிதாயினும், மலையினும் பெரியதாகும். அது நிற்க தானதரும விபரங்களை சற்று கூறுவோம். அவையாவன; தானமாவது தருமநெறியால் வந்த பொருளைச் சற்பாத்திர மறிந்து சிரத்தையோடு கொடுத்தல். சிரத்தை யெனினும் பிரீதியெனினும் ஆதரவெனினும் பக்தியெனினும் விசுவாச மெனினும் அன்பெனினும் பொருந்துமாம். பதிசாஸ்திரத்தை ஓதி அதன் பொருளை அறிந்து பாவங்களை விலக்கித் தருமங்களை அநுஷ்டித்துக் கடவுளை மெய்யன்போடு வழிபடுவோரும், தம்மைப்போலப் பிறரும் பரகதி பெற்று உய்யவேண்டுமென்று விரும்பி அவருக்கு நன்னெறியைப் போதிப்பவருமாயுள்ளவர் சற்பாத்திரமாவர். இவை நிற்க குருடர், முடவர், சிறுகுழந்தைகள் தரித்திரர் வியாதியாளர் வயோதிகர் என்னும் இவர்களும் தானபாத்திரமாவர். அன்னதான முதலியவற்றை இவர்களுக்கு செய்தலே தருமம். யாவரும் உச்சிக் காலத்தில் பசிததுவந்த ஏழைகளுக்கு இல்லை என்னாமல் முகமலர்ச்சியோடும் இன்சொற்சொல்லி தம்மால் இயன்றமட்டும் அன்னபானங் கொடுத்து புசித்தல் வேண்டும். தாம் புசிக்கும்போது ஒரு பிடி யன்னமாயினும் கொடுத்தல் ஒருவருக்கும் அரியதன்று. இது யாவருக்கும் எளிதாகும். திருமூல நாயனுடைய அருமைத்திருவாக்கைக் கேளுங்கள்.

"யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கின்னுரை தானே.

—திருமந்திரம்.

ஆகையால் எல்லாப் பொருள்களையும் விட அன்னமே சிறப்பினது. அன்னத்தினலேயே ஜீவாத்மாக்கள்விருத்தியடைந்து ஜீவிக்கின்றன. ஆகையால் அன்னமே ஜீவனுக்கு ஆதாரம் அதுவன்றியும் பிரபஞ்சமெல்லாம் அன்னமயமே ஆதலால் அன்னதானத்திற்கு மேற்பட்டதொன்றுமில்லை. எல்லாத்துன்பங்களைவிட பசித்துன்பமே அதிகமான துன்பம். 'பசிநோய்நீங்கினபோது ஜீவாத்மாக்களையும் ஆனந்தத்திற்கு அளவிராது. ஆதலால் 'ஐயமிட்டுண்' என்றும் அருளிச் செய்தார் ஔவையார்.

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந்தவ முயற்சி தாளாண்மை-தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்.

—நல்வழி-வெண்பா.

என்று மஹாத்மாக்க ளெல்லோரும் அன்னதானத்தைப் புகழ்ந்து கூறினர் அதுவன்றியும்.

அன்னதானம்.

கரிபரியாயிரங்கள் கனத்தகோதானம்பூமி
பரிவொடுரசிதஞ் சொர்ணபாத்திரம் பண்பாலீந்து
மிறகுறமொத்த கன்னிகோடி தானீந்திட்டாலும்
அரிதிதுவன்றே யன்னமே யதிகமாகும்.

—நீதிசாரம்-வெண்பா.

இவைநிற்க. அன்னசாலை இல்லாத யிடத்தில் அன்னசாலை தாபித்து சிரத்தையோடு நலயாத்திரை செய்பவர்களுக்கும்கடவுளுக்கு இடையறாத திருத்தொண்டு செய்பவர்களுக்கும் வறியார்களுக்கும் தொழில் செய்து ஜீவனஞ்செய்ய சக்தியில்லாதவர்களுக்கும், வியாதியாளருக்கும் அன்னதானங் கொடுத்தல் வேண்டும். வைத்தியசாலை இல்லாத ஊரிலே வைத்தியசாலை

ஸ்தாபித்து வைத்திய சாஸ்திரத்திலே அதிசமர்த்தர்களும் இரக்க முடையவர்களுமாகிய வைத்தியர்களை நியமித்து வியாதியாளர்களுக்கு சிகிச்சை செய்வித்தல் வேண்டும். குளம் இல்லாத ஊரிலே குளம் தோண்டுவித்தல் வேண்டும், குளத்திற்கு படிகரைகட்டுவித்தல் வேண்டும், வழிபோக்கர்களுக்கு நிழலாகும்படி வழிகளிலே மரங்கள் வைக்கவேண்டும், கோடைக்காலங்களில் தண்ணீர் பந்தல் வைக்கவேண்டும், அநாதைப்பிள்ளைகளை வளர்த்துக் கல்விகற்பித்தல் வேண்டும். அநாதைப்பிணங்களைசுடல்வேண்டும், திக்கற்றவிதவைகளை அன்னவஸ்திரங் கொடுத்து காப்பாற்றல்வேண்டும். இவ்வாறு தருமங்களைப்பற்றிச்சொல்வதானல் கணிக்க முடியாது. ஆகையால் இம்மட்டோடு நிறுத்தி இம்மையிற் தானதருமங்களைச் செய்து சொர்க்க மடைவது நலமோ அப்படியின்றி செய்யத்தகாதகன்மங்களைச்செய்து எண்ணில் காலம் நரகம்புகுவது நலமோஇதனை சிந்திக்கக்கடவீர்.

ஆகையால் எனதரிய நண்பர்காள்! மேற்கூறிய நன்னடைகளை எப்போதும் கைப்பற்றி யொழுகி அதனுலடையக்கூடும் நற்பயனை யெய்தி நல்லுலகம் புகுவீர்களெனவும், இனி இதைமறந்துவிட மாட்டீர்களெனவும் முற்றும் நம்புகின்றேன். ஸ்ரீமந்நாராயணன் அருள்புரிவராக—ஓம் சுபம்.

எஸ்-கே கோவிந்தசாமி பிள்ளை,
விழுதியூர்.

சங்கங்களும் அவைகளின் பயனும்

சங்கம் என்ற பதத்திற்கு கூட்டம் என்பது பொருள் ஆகலின் சங்கம் என்பது பொதுப்பெயர். பலவகைச் சங்கங்களிருப்பினும் இவண் ஆராய்வதற்கெடுத்துக்கொண்டதற்கேற்ப சற்சங்கம் துற்சங்கம் என இருகூறுகப் பிரித்துக்கொள்வாம்.

சற்சங்கம்:—நல்வழியில் பிறவற்றிற்கு இமசையின்றி தூயமனதோடு கூடுவது. துற்சங்கம்:—கெட்ட எண்ணத்துடனும் பொறாமையுடனும் பிறவற்றிற்கு இடையூறுண்டாக்கக்கூடுவது.

"அரிதரிது மானிடராதலரிது" என்றும,
"மக்களாக்கையிற் பிறத்தலே அரிது
மற்றதிலும் துக்ககூன் குருடு்மையை

துறத்தலுமரிது, நற்குலத்திடை வருதலு மரிது,
ஞானத்தால் முக்கணீ சர்க்காட்படல்

முற்றிலும் மரிதே" என்றும் இன்னோரன்ன அற்புத வாச கங்கள் பல உள. கிடைத்தற்கரிய அங்கஹீனமில்லாத மானிட யாக்கையைப் பெற்ற ஒவ்வொருவரும் நல்வழியில் செல்ல முயல்வதே நன்மை பயக்கக்கூடியது. ஏனெனில் பத்துமாதம் வயிற்றிற்சுமந்து பெற்று பலகஷ்ட நிஷ்டூரங்களையும் அனுப வித்த தாயாருக்கும், மிக்க சிரமத்துடன் வேண்டியவற்றைக் கொடுத்து வளர்த்து கல்விபயிற்றிய தந்தைக்கும் தங்கள் குழ ந்தை நல்லது என்றபெயர் அடைந்தால் அதுவரையில் சகித்தற் கரிய கஷ்டங்களை அக்குழந்தையின்பொருட்டு அனுபவித்த தெல்லாம் ஒரு திரணமாகவே யிருக்குமன்றோ! அதுபற்றியே,

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந்தன் மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய்" என்றார் நம் தெய்வப்புலமை திருவள் ளுவ நாயனாரும்.

அதைப்போன்றே நமக்கு ஒருவித குறையுமின்றிய உறுப் பைக் கொடுத்த எம்பிரானுக்கும் அப்பிறவியாலடையக் கூடிய தைத் தடையின்றி அளிப்பதற்கு கருணையும், இனிப் பிறவா வழியையும் தேடிக்கொண்டாலல்லவோ அவருக்கு ஆனந்த முண்டாகும்.

எவ்வமயம் எவ்வித இடையூறோ கஷ்டமோ உற்றகாலத் தும் மனச்சோர்வும் கோபமுமின்றி சற்காரியங்களிலே மட் டும் பிரவேசிக்கவேண்டும். ஒரு காரியத்தை நிலை நிறுத்துவ தற்கு ஒருவராலேயே முடிவுபெறுவது கஷ்டசாத்தியம். ஒருங் கே அநேகர் கூடித்தொடங்கின் அதற்குவேண்டிய பற்பல பொருள்களும் முயற்சியும் அதிகரித்து வெகு சுபமாய் முடிவு பெறும். அதற்குசான்றாக கலியாணம் செய்வதாக உத்தேசிப் பின் உடனே அவரவர்கள் சுற்றத்தார் முதலிய ஏனைய நண்பர் களுக்கும் தெரிவிக்கின்றார்களன்றோ! ஏன் ஒருவருக்கும் தெரி விக்காமலே செய்தால் கலியாணம் முடிவுபெறாதோ எனின்? அற்றன்று, கலியாணச் சடங்கிற்குவேண்டிய பற்பலபொருள் களையும், இன்னுமிதர அதற்குரிய காரியங்களையும் ஒருவரே செய்ய இயலாது. ஒருவரே செய்வதாயின் வீண்காலச் செலவிற்கும், தேக அசௌகரியத்திற்கும் பெரிதும் இடமுண்

டாகும். காரியமும் நன்கு நடைபெறுதன்றே? இன்றும், பெரி யநதியாகப் பெருகி வரம்பிகந்து செல்லும் தண்ணீர், முதலில் பல துளிகளாகச் சேர்ந்தன்றே பெருகிறது. முன்னோர்கள் ஒவ்வொருபொது விஷயத்திற்கும் பலர்கூடிச் செய்வதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளார்கள். ஒருவருக்குள்ள குறைகளை தெரிவித்துக்கொண்டாலன்றி தீராது. நம்முடையகாருண்ணிய துரைத்தனத்தார் ஒவ்வொருவருக்குள்ள குறைகளையும் இன் னும் மற்றபடி வேண்டியவற்றையும் தெரிவித்துக்கொள்ளுவ தற்காகவே பலபேர்களும்கூடி முடிவுசெய்யும் தீர்மானங்களை தாங்கள் நேரிலிருந்து நடத்தியதாகவும் பாவித்து அதற்கு செய்யவேண்டியதை முடித்தும் வருகிறார்கள். அதற்காகவே பொதுவாக பல சங்கங்களும் ஏற்படுத்தியிருப்பது யாவருமறிந் ததே. மேல்நாட்டார் இவ்வாறேசெய்கிறார்கள். அதினாலெவ்வித மானகாரியம் முடியவேண்டியிருப்பினும் இலகுவாய்முடிகிறது. அதுவுமின்றி ஆபத்துகாலங்களில் ஒருவர்அறிவுக்கெட்டாத நு ட்பஅறிவு சமயத்தில் வேறொருவரால்அறியப்பட்டுஅக்காரியம் முட்டின்றியும் முடிகிறதுமுண்டு. இவைகளை நன்குணர்ந்தே மேல் நாட்டார் வியாபாரம் தொழில் முதலியவைகளுங்கூட சேர்ந்தே செய்கிறார்கள். ஒருக்கால் தெய்வ சங்கற்பத்தால் நஷ்டம் ஏற்பட்டாலுங்கூட அது ஒருவரையே பாதிக்காது எல்லோருக்கும் சிறிது தான் குறையும். அற்றேலஃதாக, நம் இந்தியர்களோ ஒருவித காரியத்தையும் சேர்ந்தே செய்வதில்லை பொதுவான விஷயத்திற்குக் கூட பலர் கூடி செய்வதென்பதே கிடையாது. பக்கத்தாரோடு பொறாமை கொண்டு போட்டி போட்டு தனிமையாக வியாபாரம் செய்ய ஆரம்பித்து கடைசி யில் அந்தோ! ஏராளமான நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் ஈடு பட்டு ஏங்குகிறார்களே! இவர்கள் மேல் நாட்டாருடைய காபி குடித்தல், உடுப்பு உடுத்தல், மினுக்கல் முதலிய இதர பொருள் செலவழிக்கும் வழியைமட்டும் கைக்கொள்ள முயல்கிறார்களே யன்றி, அவர்களைப்போல் சேர்ந்து பொருள் சம்பாதிக்கும் வழியைக் கைப்பற்ற உத்தேசிப்பதே கிடையாது. (இதைப் பற்றி விரிக்கிற்பெருகும்) இனி, இதுகாறுங் கூறியவாற்றால் சங்கம் என்பது இன்னதென்பதைப்பற்றி சிற்றறிவுக் கெட்டிய வரை சிறிது விளக்கினோம். இனி எதற்கும் கெட்டதின் பலனை முன்னர் தெரிவித்தாலன்றி நன்மையின் பலன் நன்கு விளங்கா தாகலின் முதலில் துற்சங்கம் என்பதைப்பற்றி சிறிது சொல்லி பின் சற்சங்கத்தைப்பற்றியும் அதன் பயனைப்பற்றியும் விவரிப் பாம்.

(இன்னும் வரும்)

எஸ். வி. ஜீ. பாலன், திருவாரூர்.

அடியார் மகிமை

ஔவைப் பிராட்டியார் தூங்கு மஞ்சத்தின் நான்கு சங்கிலிகளும், அறும்படி பாடிய அற்புத சரித்திரம். பாண்டிய நாட்டின் கண்ணுள்ள குறுநில மன்னனொருவன் அக்காலத்து வைகிய வித்தியா குழாத்தினரது கல்வியினாற்றலை யளப்பானுன்னி, செம்பொன்னினாலியற்றிய பாரிய சங்கிலிகளிற் றொங்கானின்ற, ஓர் தூங்கு மஞ்சத்தை யமைதது அதைத் தனது சபாமண்டபத்தின் மத்தியிலேவைத்து, இத்தூக்கு மஞ்சத்தின் நான்கு சங்கிலிகளும் அற்று விழும்படி இன்ன தினத்தில் வந்து ஆராவது பாடுவாராயின், அவர்களுக்குப் பதினாயிரம் பொன் பரிசளிக்குப் படுமெனப் பல தேசங்களிலும், பறைசாற்றுவித்தனன். இச்சம்பவத்தை கேள்வியுற்ற கவிவாணரனைவரும் இவ்வருஞ் செயல் கலைக்கிழத்தியின், கண்ணருள் பெற்ற வர கவிகளுக்கேயன்றி, எம்போலிகளாலியற்றத் தக்கதன்று, எனக் கருதி அரசன் சமூகத்தில் வர வொருவிக்கரந்திருந்தனர். அச்சமாசாரத்தை அவ்வழியாய்ப்போந்த, ஔவைப் பாட்டியார் அறிந்து, அரசன் சமூகத்தில் சென்று வித்துவான்களும், வேந்தர்களும், பிரபுக்களும் சான்றாக வைக ஒவ்வொரு கவியிலும், ஒவ்வொரு சங்கிலி யறும்படி பாடுவேனென்றொருப்பட்டு தமது வழிபடு கடவுளாகிய விநாயகக் கடவுளைத் தோத்திரஞ் செய்துகொண்டு, அத்தூங்கு மஞ்சத்தின் முன்னரே நின்று, "ஒருவர் விரும்பிய பொருளை அவர் வாயாற் கேட்பதற்கு முன்னே, அவற் குறிப்பறிந்து ஈதலே உத்தமகொடையாகும். கேட்டுத்தன்னை அடுத்த பின் கொடுப்பது மத்திம கொடையாகும். அடுத்தடுத்து இன்று வா நாளை வா, எனப் பன்முறை தொடர்ந்து வரச்செய்து, கொடுப்பது நடைச் சம்பளமென்னும் காற்கூலியாகும். சொல்லிய கெடுவின்படி மாதக் கணக்காய் யலைந்த பின், முடிவிலொன்றும் ஈயாது கடிந்துபோகச் சொன்னவனுடைய சந்ததியைப்போலச் சங்கிலியே அறுபடுவாய்" என்னுங் கருத்தை யமைத்து, 'தாண்டாமலீவது தாளாண்மை தண்டி, யடுத்தக்காலீவது வண்மை, யடுத்தடுத்து பின் சென்றாலீவது காற்கூலி பின்சென்றும்; ஈயானெச்சம் போலறு' என்று வெண்பாவைப்பாடி யருளினார். உடனே ஒரு சங்கிலி யறுந்து தொங்கியது. ஔவையார் பின்னரும் 'உண்மையாக இருக்கவும், அதனைவிழுங்கி நடுத்தீர்ப்புக்காரர்க்கும் பஞ்சாயத்தாரென்னும்

ஊரிலுள்ள மேதாவியர்கள், கூடிய பொதுச்சபையிலிருக்கவும், தானே இந்தப்படி முற்பட்டு பொய் சாக்ஷி முதலியவைகளைச் சோடித்து விடுத்து; அவ்வழக்கைத் தள்ளுவித்து, அற்பமாயினும் இலஞ்சம், வாங்கிச் சீவித்துச் சந்ததியற்றுப்போவானது சுற்றமும் அவன் வழித்தோன்றல்களும் அற்றுப்போவது போல் சங்கிலியே நீயும் அறுபடுவாய்''என்னும் கருத்தை நயமைத்து (உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத், தள்ளிவழக்க தனைத்தான் பேசி-யெள்ளளவும், கைக்கூலி வாங்கியபின் காலறுவான்றன் கிளையும், யெச்சமறு மென்றுலறு) என்னும் வெண்பாவைப் பாடியருளினர். உடனே இரண்டாஞ் சங்கிலியுமற்றுத் தூங்கு மஞ்சமானது இரு சங்கிலிகளிற் றொங்கினது. ஔவைபிராட்டியார்பின்னரும் "உண்மையாகிய வழக்கைப்பேசுபவன் ஏழையாயிருக்க அவன் மாற்றவனாகிய வலியவனோடு சேர்ந்து கொண்டு அவ்வேழையினுடைய மெய் வழக்கைப் பொய் வழக்காசச்செய்தவனுடைய சநததியானது வழக்குத் தோற்றுப் பிரலாபிக்கின்ற ஏழையும், அவனதுபத்தினி, புத்திரர்களும, இடையறு தழுகின்ற கண்ணீரினால் அற்றொழியுமாயின், சங்கிலியே! நீயும் அறுபடுவா'' யென்னுங் கருத்தை யமைத்து (வழக்குடையானிற்ப வலியானைக் கூடி, வழக்கையாழி வழக்காச் செய்தவனும், வழக்கிழந்தோன் சுற்றமுந் தானும் நின்றழுத கண்ணீரால், எச்சமறுமென்றுலறு) என்னும் வெண்பாவைப்பாடி யருளினர். உடனே முன்றாவது சங்கிலியுமற்றுத் தூங்கு மஞ்சமானது ஒரு சங்கிலியில் மாத்திரம் தொங்கியது. ஔவையார் அதன் பின்னரும் மலர்ந்த குளிர்ச்சி தாங்கிய செந்தாமரை ஆசனியாகிய மஹா லக்ஷ்மியை நிகர்த்த பெண்ணே பெரியோர்கள் நிரைந்த அவைக் களத்திலெழுந்து, எடுத்த விஷயத்தை வாசகாலங்காரமாகப்பேசி, விதர்ப்பின்றி விளக்கவல்லார், பஞ்ச லக்ஷணங்களுமமையக் கவிபாடும ஆற்றலுள்ள புலவர் ஆயிரத்தி லொருவர், பெருங்காப்பியங்களை நவரசமும் பொருந்த வியாக்கியானம் செய்யவல்ல மேதாவியர் பதனாயிரத்துக்கொருவர், தம்மை வந்தடைந்தார்க்கு வரையாதுகொடுக்கும் வள்ளல்கள் கோடிக்கொருவர் இவ்வண்ணம் உலகில் நிகழ்வது திண்ணமாயின் அது முக்காலுஞ்சரதமென்று சங்கிலியே, நீயும் அறுபடுவா'' யென்னும் கருத்தை யமைத்து, (ஆர்த்தசபை நூற்றொருவர்; ஆயிரத்தொன்றும் புலவர் வார்த்தை பதினாயிர

த்தொருவர் - சீர்திகழுந் - தண்டாமரைத் திருவேதாதாகோ டிக் கொருவர் உண்டாயி னுண்டென்றறு) என்னும் வெண்பாவைப் பாடியருளினார். உடனே நான்காவது சங்கிலியும் அற்றுத்தூங்கு மஞ்சமானது நிலத்தின் கண்ணே வீழ்ந்தது. இவ்வற்புத செயலை அவ்வவையின்கண் வதிந்த அரசர் குழாமும், வித்துவகோஷ்டிகளும், நிதிக்கிழவோரும் ஏனைய ஆடவர் மகளிருங்கண்ணுற்று, எல்லையற்ற இரும்பூதெய்தி ஔவை பிராட்டியார் சாரதாம்பிகையின் அவதாரமென்பது திண்ணமாமென அடங்கா உவகையெய்தி கரகோஷஞ்செய்து ஆர்ப்பரித்தனர். அச் செயற்கருஞ்செயலை பிரத்தியக்ஷத்தில் கண்ட குருநிலமன்னன் பெறுமகிழ்ச்சியடைந்து பதினாயிரம் பொன்னால் கட்டப்பட்ட பொற்கிழியைச் சன்மானஞ் செய்தனன். ஔவையார் அரசனீந்தவெறுக்கையனைத்தையும், அங்கீகாரஞ்செய்து அவைக்களத்தி கண்ணே குழுமி வகைய சிவனடியாருக்கும், புலவர்களுக்கும், ஆதுலர்க்கும், பகிர்ந்து கொடுத்து, அரசன்பால்விடைபெற்றுக் கொண்டு, பாண்டி நாட்டிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்குமாறு சென்றனர். ஸ்ரீ விநாயகப் பெருமானுடைய திருவருளைப் பெற்ற மெய்யடியார்களுக்கு எச்செயலும் அரிதன்று. கல்வியறிவற்ற அநாகரிகர்களுடைய முன்னிலையிலே செய்கின்ற அற்புதங்களிலும் அரசர்களுடைய சபையிலும் கலைஞானங்களிற்றேர்ந்த விற்பன்னர் குழுமிய அவைகளத்திலுஞ் செய்யும் அற்புதங்களே உலகத்தில் எல்லாராலும் ஒப்புகொள்ளத் தக்கன. உண்மை நூலுணர்ச்சியிற்ற அவிவேகிகளுக்கு முன்னே செய்யப்படும், அற்புதங்கள் கண்கட்டு வித்தைகள் போன்ற பாசாங்கான செய்கைகளாகுமன்றி உண்மையான அற்புதங்களாக மாட்டா. ஆப்தர்களே அமைச்சர்களும் அறிவுடையோர்களும் நிறைந்த அரச சமுகத்தில் அற்புதஞ்செய்யுமென்று கேட்க மௌனமுற்று வாளாவிருந்து கல்வியறிவும் உலக அனுபவங்களும் தெறியாத மிலேச்சர்களுக்கு முன்னே கண்கட்டு வித்தைபோன்ற பிரச்சாயல் செய்கைகளை செய்தவர்களைச் சிலர் வாய் கூசாது, கடவுளென்று கூறுகின்றார்கள். ஐயையோ! இதனிலும் இதனிலும் பார்க்கத் தேவதூஷணம், வேறு யாதிருக்கின்றது. அற்புதஞ் செய்தலினாலே ஒருவர்கடவுளாக மாட்டார் கூலிக்கு மாரடிப்பார் போன்று கடவுளாலருளப்பட்ட மனச்சாக்ஷியைக் கைவிட்டு, செஞ்சோற்றுக்கடன் கழிக்கப் பசப்பு வார்த்தைகள் கூறித்திரியும், பதடிகளுடைய மாய வலையிற்சிக்காது மலரகிதராகிய சிவ பெருமானுடைய மெய்யன்பர்கள் செய்த செயற்கறிய அற்புதங்களை பெரியபுராணம் முதலிய உண்மை நூல்களிற் கண்டு சந்தேகந் தெளிந்து உய்யக்கடவீர்கள்.

அ-க. தியாகராசன்,
இள்ளான் மிலாய் எஸ்டேட்.

ஆறுவது சினம்

இது நமதுமெய்ஞ்ஞான செல்வராகவிளங்கிய ஸ்ரீ ஔவை யார் திருவாய்மலர்ந்தருளிய ஆத்திசூடி என்னும் நூலினிரண் டாவது வாக்கியமாகும். நீ உனக்குள்ளே தணியத் தகுவது கோபமே யாம் என்பதிதன்பொருள்.

சினம் கோபம் வெகுளி சீற்றம் என்பன ஒருபொருட் கிளவி. உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள்மிசை யெழுங் கோபத்தைத் தணித்தல்வேண்டும். ஏனெனிற் சினத்தால் விளை யக்கூடிய தீமைகள் மற்றெதனாலுஞ் சம்பவிக்கிறதில்லை. ஒருவ னுக்குப் பிறர் குறும்பு செய்யும்போதும் அல்லது பிறர் தன் பொருளை யபகரித்துக்கொண்டபோதும் தான் பிறராற்றுன் பப்படும் போதும், தன்னைப் பிறர்வைது இழிவாகப்பேசும் போதும்கோபம் உண்டாகும். கோபம்உண்டாகும்போது அவ ன்பிறருக்குத்தீங்குசெய்யவே எண்ணங்கொள்வான்.

உள்ளங்கவர்ந்தெழுந்தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங்குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்தலரிதோ தடங்கரைதான்பேர்த்து
விடுத்தலரிதோ விளம்பு. என்பதுபோல் ஒவ்வொருவரும் தங்கள் பால் மேவுகின்ற கோபத்தைக் காத்துக்கொள்ளுதலே குணமென்று கொள்ளப்படும்.

பிறர் தங்கள்பாற் செய்கின்ற குற்றத்தைப் பொறுத்துக் கொள்வோர்கட்குச் சினமே உண்டாகிறதில்லை. ஏனெனின்,

கூர்த்துநாய்கௌவிக் கொளக்கண்டும் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள்கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயாற்மீட்டு. என்னுமான்றோர் வாக்கே போல் ஒருநாய் கோபங்கொண்டு ஒருவனைக் கடித்தால் கடி யுண்டவன் திரும்பவும் அந்நாயைக் கடிக்கயாருங் கண்டோ மில்லை. அதுபோல் கீழ்மக்கள் கீழ்மையான சொற்களைச்சொன் னால் மேன்மக்கள் திரும்பவும் ஒன்றும் பேசமாட்டார்கள்.

கோபத்தினால் ஒரு நன்மையு முண்டாவதில்லை. நல்லபுத்தி யுடையவன்பிறர்மீதுகோபங்கொள்ளமாட்டான்.ஒருவன் தனக் கொரு இடையூறும் வராமல் தன்னைக்காத்துக் கொள்ளவேண் டுமானால் முதலில் சினத்தைக் காத்துக்கொள்ளல்வேண்டும்.

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்ககாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம்"

நாம் ஒருவரிடமுங் கோபங்கொள்ளுதற்கூடாது. நமக்கு மேலோரிடத்தில் நாம் சினங்கொண்டால் "மூங்கில் கழிமலை

யைக் கெல்லப்போய்த் தானே ஒடிந்து தன் உருவமேயில்லா தழிந்தொழிவதுபோல்" மேலோரால் நாம் தோற்கடிக்கப்படு வோம். நாம் நம்மையொத்தாரோடு கோபங்கொண்டால் "புலி கள் ஒன்றோடொன்று சண்டையிட்டு இரண்டுந் துன்பப்படுவ துபோல்" நாம் துன்பப்படுவோம். நாம் நமக்குச் சிறியோரி டத்துச் சீற்றங்கொள்ளலாமென்று நினைத்தோமானால் உலகத் துஜனங்கள் பழிக்கும் பழிசொல்லுக் காட்களாகி மறுமையில் நரகமும் போய்ச்சேர்ந்து துன்பப்படுவோமாதலால் நாம் ஒரு வரிடத்துஞ் சீற்றங்கொள்ளாதிருத்தல் நன்மையாகும்.

ஒருவனை ஒருவன் ஜெயிக்கவேண்டுமெனில் கோபமில்லாத வனே ஜெயிப்பான். "வெல்வதுவேண்டின் வெகுளிவிடல்." என்னும் வாக்கியமும் இங்கு நினைக்கத்தக்கது கோபத்தின்வச மான ஒருவன் அச்சமயம் இன்சொலின்னதென் றவனுக்குத் தெரியவே தெரியாது. எப்பொழுதுங் கடுமையான சொற்களை யே பிரயோஜனமாகும்படி செய்வான். திரும்பவும் தான் இன் னவிதமாகப் பேசுகிறோம் இவ்விதமான வார்த்தைகளை யுப யோகிக்கிறோம் என்பதுகூட அறியாமல் தன் நாசிமுனையில் முத்துப்போல் நீரூர மனம்போனவிதமாக வார்த்தையாடுகி றான். சினவழிப்பட்டவர்கள் எவ்விதத்திலும்சந்தோஷமாகவே இருக்கமாட்டார்கள்.

கோபத்தின் கொடிய தன்மைக ளொவ்வொரு வருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலடியில் வருஞ்செய்யுளுணர்த்தும்

"கோபமே பாவங்களுக்கெலாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்கும், கோபமே யொன்றையுங் கூடிவரவொட்டாது கோபமே துயர்கொடுக்கும், கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு கோபமே உறவறுக்கும், கோபமே பழிசெயுங்கோப மேபகையாளி கோபமே கருணைபோக்கும், கோபமே யீனமா ங்கோபமே யெவரையுங் கூடாமலொருவ னாக்கும், கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநரகக்குழியினிற் றள்ளுமால், ஆபத்தெலாந் தவிர்த்தென்னை யாட்கொண்டருளு மண்ணலே யருமைமதவே, எனுதினமு மனதினினை தருசதுர கிரிவள ரறப் பளி சுரதேவனே."

இன்னுஞ் சினத்தாற் கிதைந்தவர் கணக்கில்.

"கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுஷனும் கோலமாயினான்
கோபத்தா லிந்திரன் குலசம் போக்கினான்
கோபத்தாற் கெட்டவர் கோடி கோடியே."

ஆகையால் ஒவ்வொருவரும் கோபம் உண்டாகும் பொழு தே அதை அறவே ஒழித்தல் வேண்டும்

எம். மாணிக்க நாயகா, புதுவை.

ஐவகை யாகம்

கருமயாகம், தபோயாகம், மந்திரயாகம், தியானயாகம், ஞானயாகம் என ஐவகை யாகங்கள் ஆகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன.

இவற்றுட் கருமயாகமாவது நூல்விதிப்படியே ஸ்நான தருப்பணங்கள் செய்து சிவார்ச்சனைபண்ணி அக்கினிகாரியம் முதலாயின செய்லாம். பரமப்பிரதிட்டை செய்தல், தீக்கை செய்தல் என்னுமிவையும் கருமயாகத்து ளடங்கும்.

தபோயாகமாவது, உணவுமுதலியவற்றை ஒறுத்தலினுற் சரீரம் வாட்டமடையச் சாந்திராயண முதலாகச்சொல்லப்படும் விரதங்களை யநுட்டித்தலாம். இச்சாந்திராயண முதலிய விரதங்கள் சிலபாவப் பிராயச்சித்தமாகவும், இட்டசித்திகளைப்பெறும் நோக்கமாகவும், ஒன்றுங்குறியாது முத்திசாதனமாகவும் அநுட்டிக்கப்படும்.

மந்திரயாகமாவது, சர்வாபிஷ்டங்களையுங் கொடுக்குஞ் ஸ்ரீ பஞ்சாக்ஷர முதலிய மந்திரங்களைச் செபஞ் செய்தலாம். (மந்திரயாகமெனினுஞ் செபயாகமெனினும் பொருந்தும்) (மந்திரம் என்னும் பதம் நினைப்பவனைக் காப்பது எனப் பொருள் படும்). இம்மந்திரசெபம் மானசமெனவும், மந்தம் எனவும் உரை எனவும் மூவகைப்படும். இவற்றுள் மானசமாவது நாவசையாவண்ணம் மனத்திலுச்சரித்தல். மந்தமாவது நாவசையப் பிறர்செவிக்குக் கேளாவண்ணம் மெள்ள உச்சரித்தல். உரையாவது பிறர்செவிக்குக் கேட்கும்வண்ணம் உச்சரித்தல். இம்மூவகையுள் மந்திரத்தை மானசமாக வுச்சரிக்குங்காற் செபமாலையை அநாமிக விரலின்கட்சேர்த்துப் பெருவிரலாற் றள்ளிச்செபஞ்செய்தல் வேண்டும். (அநாமிகைவிரல்-ஆழிவிரல்). மந்தமாகச் செபம் செய்யுங்காற் செபமாலையை மத்திமவிரலின்கட் சேர்த்துப் பெருவிரலாற்றள்ளிச் செபஞ் செய்தல்வேண்டும். (மத்திமவிரல்-நடுவிரல்). உரையாகச் செபஞ் செய்யுங்காற் செபமாலையைத் தர்ச்சனிவிரலின்மீது வைத்துப் பெருவிரலாற் றள்ளிச் செபஞ் செய்தல்வேண்டும். (தர்சனிவிரல்-சுட்டுவிரல்). மந்திரங்களை மானசமாகச் செபஞ்செய்தல் உத்தமமும், மந்தமாகச் செபித்தல் மத்திமமும், உரையாகச் செபித்தல் அதமமுமாகும். செபமாலை உருத்திராக்கத்தாலும், தர்ப்பையினலும், தாமரைமணியினலும், படிகமணியினலும், சங்குமணியினலுஞ் செய்யப்படும். இவைகள் முறையானே ஒன்றற்கொன்று தாழ்ந்தபலனைக் கொடுக்கும். இறையானும் விரலானுஞ் செபித்தல் இன்னுந் தாழ்ந்த பலனைக்கொடுக்கும். செபமாலையைக்

கையிற் கொண்டு செபஞ் செய்யும்பொழுது புத்திகாமிகள் செபமாலையைக் கீழ்நோக்கித் தள்ளியும், முத்திகாமிகள் மேல்நோக்கித் தள்ளியும் செபித்தல் வேண்டும். இன்னும் போகத்தை விரும்பினோர் பிரணவத்தோடுகூடிய பஞ்சாட்சரத்தைப் பிராணவாயு இடைநாடியில் நடக்கும்பொழுதும், முத்தியை விரும்பினோர் பிங்கலைநாடியில் நடக்கும்பொழுதும், இரண்டையும் விரும்பினோர் சுழுமுனைநாடியில் நடக்கும்பொழுதுஞ் செபஞ்செய்தல்வேண்டும் என ஆகமங்கள் கூறும்.

தியானயாகமாவது, மனத்தை விடயங்களிற் செல்லாவண்ணம் தடுத்து நிறுத்திச் சதாசிவமூர்த்தம் முதலிய மூர்த்தத் திருவுருவங்களிலொன்றை அன்போடும் மனத்தினிறுத்தித் தியானித்து யாற்றுநீ ரிடையீடின்றிப் பாயுந் தன்மைபோல அத்தியானத்தி லிடையீடின்றிக் கலந்துநிற்றல்.

ஞானயாகமாவது, அநாதிமலமுத்தராகிய சதாசிவமூர்த்தியினால் அருளிச்செய்யப்பட்ட வேத சிவாகமங்களை ஓதுதலும், ஓதுவித்தலும், அவற்றிற்சொல்லும் பொருளைச் சந்தேகவிபரீதமறத்தெளிதலும், தெளிவித்தலும், அப்பொருளை அநவரதமும் மறவாது மனத்துத் தரித்தலுமாகும்.

இவ்வகையாகங்களுட் கன்மயாகம் போகவிதங்களையும், தபோயாகம் சிந்திதமனோரதசித்திகளையும், மந்திரயாகம் கொடிய கன்மங்களுற்பவியாது கெடுத்தலையும், தியானயாகம் சாரூபபதவியினையும், ஞானயாகம் முத்திகளில் விசிட்டமாகிய அத்துவிதமுத்தியினையுங் கொடுக்கும்.

இன்னும் கன்மயாகத்திற் றபோயாகம் பதின்மடங்கதிகமும், தபோயாகத்தில் மந்திரயாகம் பதின்மடங்கதிகமும், மந்திரயாகத்திற் றியானயாகம் நூறு மடங்கதிகமும், தியானயாகத்தில் ஞானயாகம் அனந்தமடங்கதிகமுமாகும். ஆதலால் வேதாகமங்களை யோதியுணர்ந்த தன்வழிநிற்றலாகிய ஞானயாகமே அனைத்தினும் விசிட்டமுடையதாகும் இதன்விசிட்டம் "கற்றல்கேட்டலுடையார் பெரியார்கழல்கையாற்றொழுதேத்த' எனவும்" "கல்லாநெஞ்சி னில்லானீசன், பொல்லாதாரோ டல்லோநாமே" எனவும், "கல்லாதார் காண்டற்கரியானை" எனவும் "அரு'மறையினகத்தானை" எனவும், "வைப்பா யருந்தா மருந்தாகிச் சிறந்த ஞான மகவினையே' எனவும் வரும் ஆன்றோர் வாக்குகளான் நன்கு தெளியப்படும். (இந்து—ம்)

வீ. நடராசன்,

உபாத்தியாயன், மீசாலை.

சோதிட கலா நிதி

(325-பக்கத்தொடர்ச்சி)

ஆகலின் அன்னோர்க்கு ஈண்டு சிறிது எடுத்துக் காட்டுவது ஆவசியமா யிருக்கின்றது. நமக்கு ஒரு சரீரமும் அதை நடத்துவதற்கு ஒரு ஆன்மாவும் எப்படிஇருக்கின்றதோ அப்படியே சூரியன் சந்திரன் முதலான கிரகங்களின் மண்டலங்களுக்கும் உண்டென இங்கு கூறப்படும். நியாயங்களால் விவேகிகள் உய்த்துணர்ந் துய்வாராக.

இப்பூகோளத்தில் சக்கிரவர்த்திகளில் அனேக போக்தர்கள், அவரவர்கள் கர்மங்களுக்குத் தக்கபடி, ஈசுவரனால் கொடுக்கப்பட்ட போக்கியபோக உபகரண போகஸ்தானங்களையுடையவர்களாய், பிரகாசித்திருப்பதைப், பிரத்தியக்ஷமாகப் பார்த்துள்ள விவேகிகளுக்கு, அனேகமாயிரம் யோசனைதூரத்திற் கப்பால், இப்பூகோளத்தை விடப் பெரியதாய் தேஜோமயமாய், மிகரமணிய கரமான நதிகிரி பிரதேசங்கள் முதலானவைகளுண்டா யிருக்கும், சூரிய சந்திராதி கிரகமண்டலங்களிலிருக்கும் தேவதைகள், அற்ப யந்திரங்களைக் கொண்டு பார்க்கும் நம்முடைய அற்ப திருஷ்டிக்குக் காணப்படாமல் போவதனாலேயே, அம்மண்டலங்களை யடைந்தவர்களையும் பார்த்தவர்களையும் புராணாதிகளில் சொல்லி யிருப்பதைப் பொய்யென்று தள்ள மாட்டார்கள்.

இப்பூமியில் அற்ப ஐசுவரிய முடையவர்களுக்கு அநேக பிரதேசங்களில் லீலா போகாதி கார்யஸ்தானங்களும், அதற்குத் தக்க பரிகரபரி வாரங்களும், சித்தமாக விருப்பதைப்பார்க்குங் கால் பிரமருத்தி ரேந்திர சூரிய சந்திராதியர்களுக்கு அனேக பிரதேசங்களில் லீலாபோகாதி அதிகாரஸ்தானங்களும் அவ்வவற்றிற்குத் தக்கபரிகர பரிவாரங்களும் புராணங்களில் சொல்லியுள விதமாக விருக்கும் என்னும் விஷயத்தில் விவேகிகளுக்குச் சந்தேகமே இராதென்பது துணிபு, ஆகலின் சர்வேசுவரன் தபசித்தர்களை பிரமருத்திரேந்திர சூரிய சந்திராதிகளாகசெய்து அவர்களுக்கு லோகமண்டலாதி பத்தியங்கள் கொடுத்ததாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இராஜ

ளுல் கொடுக்கப்பட்ட இராஜ்யாதிகாரங்க ளுடையவர்களைச் சிலர் ஆசிரயித்தவர்களால் சில பிரயோசனங்களை யடைகின்ற தைப்போல், சர்வேசுவரனுல் கொடுக்கப்பட்ட லோகமண்டலா திபத்தியங்களை யுடைய பிரமருத்திரேந்திர சூரிய சந்திராதியர்களையும் சிலர் ஆசிரயித்து அவர்களா லடையத் தக்கபலன்களையடைகின்றுர்கள்.

சர்வேசுவரன் பூமியிலவதாரர்கள் கர்மானு குணமாகச் சில சுபாசுப சூசக காரர்களை ஏற்படுத்தி யிருப்பதைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்த விவேகிகள் அங்ஙனமே பகோளத்திலுங் கர்மானுகுணமாகச் சில சுபா சுப சூசக காரக கிரகங்களை யேற்படுத்தியிருப்பதாக சாஸ்திரங்களில் சொன்னவற்றைச் சத்தியமாகவே நம்புவார்கள். ஆதலால் நமது பார்வைக்குத் தெரியாமலிருப்பதைக் கொண்டு லோகாதிகளும் அதற்கதிகாரிகளான பிரமாதிகளும் மண்டலாதிபதிகளான சூரியசந்திராதிகளும் இல்லை எனக்கருதி பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் சர்வேசுவரனும் இல்லை என்றுதள்ள ஏற்பட்டு நாஸ்திகர்களாவார் என்பது சித்தாந்தமாம். மரீயையென்று கூறப்படுவதாகிய மூலப்பிரகிருதியினின்றும், உலகங்க ளெல்லாந் தோன்றுதல் சிருஷ்டியெனப்படு மாகலின், அதைக்கூறும் இப்பிரகரணத்திற்குச் சிருஷ்டிப்பிரகரணமெனப் பெயருண்டாயிற் றென்றுணர்க. இத்துடன் சிருஷ்டிப் பிரகரணம் சம்பூர்ணம். சுபம்.

(இன்னும் வரும்)

வித்வான்-வ-கு. வேலுநாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

(326 ம் பக்கம் தொடர்ச்சி

அசுவகந்தாதி நெய்.

பாருமே க்ஷயங்களெல்லாந் தீருதற்குப்
பாடுகிறே னசுவகந் தாதி நெய்யை
வீறுடைய வமுக்கரா துலந்தா னென்று
மேன்மைச்சா றணை யிரண்டை சிவதை சங்கு
வீறுடைய மிளகுசா றணையும் வேருய்
மிஞ்சாமல் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
வாறுடைய பெருங்குமிழும் பெருவாகை முல்லை
மகத்தான கூவிளமும் பாதிரியுங் கேளே. (1)
பாதிரியுஞ் சிற்றுமல்லி பேரா மல்லி
பண்பான நெல்லியொடு கண்டங் காரி
நீதிசிறு வழுதலைவேர் பலந்தான் மூன்று
நிறுத்தங்கே யிவையெல்லா மிடித்து மைந்தா
ஆதிபெரும் பாண்டத்தி லிட்டுப் பின்பே
யளந்துவிடு விருதூணி சலந்தா னப்பா
போதியே யெட்டொன்றாய்க் குறுக்கி வாங்கிப்
புகட்டடா வானெய்யைப் படிதா னென்றே. (2)
நெய்விட்டு மதுரமொடு சூரிய பத்திரி
நேரான தேக்குடயம் மூன்று கடுகு
ஐயற்ற திரிபலையுந் தேவ தாரம்
அரத்தைமஞ்சள் மரமஞ்சள் திப்பிலி மூலம்
மையற்ற கொடுவேலி வெதுப்ப டக்கி
பருந்தகரம் வெட்பாலை கடுகு ரோணி
நொய்யற்ற வரேணுகமு மட்ட கந்தம்
நோக்கவே யின்னமுண்டு நுணுக்கந் தானே. (3)
தானென்ற எவாச்சாரம் சத்தி சாரம்
சகாயமா மருள்காய்ச்சு லவணந் தானும்
தானென்ற வகையொன்று வராக னு
தனித்தனியே தூக்கிநீ யாட்டி மைந்தா
தானென்று கலக்கியே நாலு நாள்தான்
சக்கினையாய்த் தீயிலிட் டஞ்சா நாளில்
தானென்று வடித்தெடுத்து மேல்ம ருந்தைச்
சாற்றுகிறேன் காந்தபற்பம் தாம்பிரபற்பம் காணே. ()
காணப்பா முற்பற்பம் பலந்தான் ரண்டு
கனத்தமணித் திப்பிலியும் பலந்தா னெட்டு
தோணப்பா தூளாக்கி நெய்யி லிட்டுத்
துஞ்சாத தேன்படிதான் ரெண்டு விட்டு
பூணப்பா தான்யபுடந் திங்க ளொன்று
புகட்டிவைத்துப் பிறகருந்தப் போநோய்கேளு
வீணப்பா க்ஷயரோகம் சுவாச காசம்
வீணான பீலிகையு மரோசகம் போமே (5)

(இ-ள்) 1. க்ஷயரோகங்கள் எல்லாம் தீர்தற்கு அமுக்க ரூங் கிழங்கு நெய்யை நான் பாடுகிறேன். அஃதெப்படியென் றால்; அமுக்கனுங் கிழங்கு 100-பலம், வெள்ளைச் சாட்டரணை க்கிழங்கு, பிரண்டை, சிவதைவேர், சங்கம்வேர், மிளகு, சாதா ரண சாட்டரணைக் கிழங்கு இவைகள் தனித்தனி பத்துப் பத் துப் பலம், பெருங்குமிழம்வேர், பெருவாகைவேர், முன்னை வேர், வில்வவேர், பாதிரிவேரும்.

(2.) சிற்றாமல்லி, பேராமல்லி, நெல்லிவேர், கண்டங் கத்தரிவேர், சிறுவழுதலைவேர், இவைகள் வகை ஒன்றுக்கு பலம் மூன்று ஆக இவைகளையெல்லாம் நன்றாய்ச் சுத்தமுள்ள தாக எடுத்து நன்றாயிடித்து ஒரு பெரிய பானையிற்போட்டு 16-படி சலம்விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயா யெரித்து எட்டொன் றான 2-படிகஷாயம் ஆனவுடன் வடித்து வேறோர் மண்பாண்ட த்திலூற்றி அந்தக்கஷாயத்துடன் பசுநெய்படி விடவேண்டும்.

(3.) அதில் அதிமதுரம், சூரிய காந்தியிலை (அதாவது ரத்தன்புருஷ்) அல்லது (ஒரிதழ்த்தாமரை) கண்டுபாரங்கி, அதி விடயம், சுக்கு, திப்பிலி,மிளகு,கடுக்காய்த்தோல், நெல்லிக்காய் த்தோல்,தான்றிக்காய்த்தோல், தேவதாரசக்கை,சந்நராஷ்டம், கறிமஞ்சள், மரமஞ்சள், திப்பிலிக்கட்டை, சித்திரமூல வேர்ப் பட்டை வெதுப்படக்கி, கிரந்திதகரம், வெட்பாலைவிதை, கடக ரோகணி, காட்டுமிளகு, அட்டகந்தம் இவைகளும்,

அட்டகந்தமாவன:—அகில் கட்டை, சந்தனக்கட்டை,லவ ங்கப்பட்டை, கோஷ்டம், கஸ்தூரி மஞ்சள், குங்குமப்பூ, பச் சைக்கர்ப்பூரம், பச்சிலையென்னும் எட்டுமணமுள்ள பொருள்கள்

இவற்றை அட்ட சந்தமெனக் கூறுவாருமுளர்.

(4.) எவாச்சாரம், சத்திசாரம், மருட்கிழங்கு, இந் துப்பு இவை வகையொன்றுக்கு வராகனெடை நான்குஎடுத்து இவைகளை நன்றாயரைத்து அந்நெய்யிற்கலந்து நான்கு நாள்வ ரைக்கும் சிறுதீயா யெரித்து அஞ்சாவதுநாள் பக்குவப்படுத்தி வடித்து எடுத்து அதில் காந்தபற்பம், தாம்பிர பற்பம்.

(5) இந்த இரண்டு பற்பங்கள் வகைக்கு ஒவ்வொருபலங்கல ந்துநன்றாய் மணிபிடித்த அரிசிதிப்பிலி எட்டுப்பலம்தூளித்து வஸ்திரகாயம் பண்ணி அதில்போட்டு இரண்டுபடி தேன்விட்டு தானியபுடத்தில் ஒருமாதம் வைத்து முப்பத்தோராவது நாள் எடுத்து (இஷ்ட தேவதையைப் பிரார்த்தித்து) காலைமாலை இரு வேளையும் வேளைக்கு ஒரேகறண்டிவீதம் சாப்பிட்டு இச்சாபத் தியமிருந்தால் க்ஷயரோகம், சுவாசகாசம், சுரக்கட்டி, அரோ சகம், சுரம், குன்மம், சூலை, ரத்தபித்தம், எலும்புருக்கி, வெப் பு, பார்வை முதலிய அனேக ரோகங்கள் தீரும் என்றறிக.

மா. வடிவேலு முதலியார்.

கௌரீ விஜயம்

(332-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்தருமத்தை உலகத்தாருக்கு நடத்திக் காண்பிப்பதற்காகவே, தாங்கள் அவதரித்திருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன். சிவபெருமான் தங்களுக்கு விரைவில் அநுக்கிரகஞ்செய்வார்.

சுப:—ஸ்வாமின்! நாங்கள் கிருதார்த்தர்களாகும் பொருட்டு இங்குபோஜனஞ் செய்யப் பிரார்த்திக்கிறேன். இலையிலெல்லாம் பரிமாறி யிருக்கிறது.

யோகி:—இதோ வந்து விட்டேன். (எழுந்து இலையில் உட்காருகிறார். சுபவிருதை அன்னத்தைப்பணிவுடன் படைக்கிறாள். யோகி பரிஷேசனஞ் செய்கிறார். விருபாக்ஷர் முனிவர் கையில் ஆபோசனத்திற்கு ஜலம் வார்க்கிறார். யோகி பகவானை ஸ்மரித்துவிட்டு, உதகத்தை உட்கொள்ளுமுன் திடீரென்று ஏதோநினைத்துக் கொண்டு, விருபாஷரைப் பார்த்து). அந்தணரே, உமக்குச் சந்ததியில்லையா?

விரு:—(சற்று நேரம் திகைத்து) ஸ்வாமி! அந்த விஷயத்தில் நான் பெரும்பாவி; ஈசன் அந்த பாக்யத்தை எனக்குக்கொடுத்தருள வில்லை. யான் என்னசெய்வேன்? எவ்வளவோ விருதங்களை எடுத்து வருகிறேன். புண்ணிய ஸ்தலங்களுக்குச்சென்று தீர்த்தயாத்திரை செய்து பகவானைத் தரிசித்து வருகிறேன். ஜோதிஷர்களைக் கொண்டு கிருகங்களைத் திருப்திசெய்விப்பதற்காகப் பல சாந்திகளையும் செய்து பார்த்தேன். தம்போன்ற பெரியோர்களின் அநுக்கிரகத்தையும் பெற்றேன். ஆயினும் ஈசன் எனக்குப் புத்திரப்பேற்றைக் கொடுக்க வில்லை. தாங்களும் எனக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டும்.

யோகி:—பிராமண சிரேஷ்ட! தெய்வாதீனமாகத் தப்பினேன்; கொஞ்சநேரம் யோசிக்காமல் போனால் மகா பாபத்திற்கு ஆளாகி விடுவேன். மக்களில்லாத வீட்டின் வாசலையும் மிதிக்கக்கூடாது. மக்களற்ற வீட்டில் புசிப்பவனுக்குப் பெரும்பாவம் ஏற்படுகின்றது. ஆனதால் நான் உமது வீட்டில் புசிக்கமாட்டேன்.

யோகி:—வீதியை நோக்கிப்போகின்றார்; விருபாக்ஷர்விரைந்து முன்னே சென்று, யோகியின் பாதகமலங்களைப் பிடித்துக் கொள்ளுகின்றார்.

விரு:—பகவானே! தங்களுடைய குக்ஷியில் அடியேனது அன்பால் ஆக்கப்பட்ட அன்னம் சேர்ந்த மாத்திரத்தில் எனது தீவினைகளெல்லாம் காட்டுத் தீயைக்கண்ட பஞ்சைப்போல் பறந்து விடும்; பிறகுநான் கிருதார்த்தனாகிப் புத்திரப்பேற்றைப் பெறுவேன் என்றல்லவோ எண்ணியிருந்தேன். முனிவரே! இல்லாத விஷயத்திற்கு நான் என்ன செய்வேன்? மக்களற்றவர் மகா பாபிகளென்பதும், முக்கடன்களையும்தீர்த்தபின்பே மோக்ஷத்தில் புத்தியைச் செலுத்த வேண்டுமென்பதும், புத்திரன் முகத்தைக் காணாதவர்களுக்கு ஸ்வர்க்கலோகம் இல்லையென்பதும் வாஸ்தவம் தான். ஆயினும் என்விஷயத்தில் கருணைகொண்டு எளியேனது குடிசையில் அமுதுண்டு செல்லவேண்டுகிறேன். வாய்க்கெட்டியதைக் கைகெட்டாமல் பண்ணினான் மகாபாவி என்ற பழிச்சொல்லுக்கு என்னைப்பாத்திரனாக்கவேண்டாம். பரமசாதுவே! தாங்கள் பசியோடு வந்தீர்கள். எனது பூர்வபுண்ணிய பலத்தினால் எனது குடிசையும் தமது பாததூளி பட்ட மாத்திரத்தில் பரிசுத்தமாயிற்று. பிறகு உள்ளே வந்து போஜனம் செய்வதற்குப் பீடத்தில் உட்கார்ந்தீர்கள். உடனே நான் ஆபோசனத்திற்கு நீர் வார்த்தேன். பின்பு தாங்கள் உமக்கு சந்ததி இல்லையா? என்று கேட்டீர்கள். நான் இல்லையென்றுசொன்னேன். உடனே தாங்கள் வெளியேவந்து விட்டீர்கள் இது தர்மமோ? அடியேனை மகாபாபத்திற்கு ஆளாக்கிவிடுவது நீதியோ? சரணமடைந்த என்னைத் தாங்கள் எவ்விதமாவது காப்பாற்ற வேண்டும்.

யோகி:—விப்பிரவர! நீர் சொல்லியவையாவும் உண்மையே உம்முடைய விஷயத்தில் நான்மிகவும் இரக்கங்கொள்ளுகிறேன். ஆனால் உமது கிருகத்தில் போஜனம் பண்ணமுடியாதது பற்றி மிகவும் விசனிக்கிறேன். மக்களில்லாத மனையை மன்னுதலும் தவறு. ஆனதால் நீர் என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம். உம்மைப்பார்க்கும் பொழுது எனக்கு மிகவும் பரிதாபமாயிருக்கிறது. உம்மிடம் பல செல்வங்களிருந்தும் புத்திரச்செல்வமில்லாததால் உமது வாழ்நாட்களில் சுகம் கிடையாது இது பற்றியே.

“படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணு
முடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி

யிட்டுந் தொட்டுங் கல்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழுநாளே" —(புறம்)

என்றனர் ஆன்றோர்.

அக்குறையைப் போக்குவதற்கு ஓர் உபாயம் கூறுகிறேன் நீர் அடுத்தவனத்திற்குச் சென்று, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றைச் செய்கின்றவராயும், அஷ்டமூர்த்தியாயும், காலகூட விஷத்தை யருந்தி நீலகண்டன் எனப்பெயர் பெற்றவராயும், சூரபத்மனை வென்ற ஷண்முகருக்குத் தந்தையாயும், முப்புறங்களை எரித்தவராயும், மன்மதனைப் பொசுக்கினவராயும், கங்கையின் கர்வத்தை யடக்கினவராயும், எங்கும் நிறைந்தவராயும், எல்லாவற்றையும் அறிந்தவராயும், பக்த பராதீனராயு முள்ள பரமாத்மாவைக் குறித்துத் தவஞ்செய்வீரேயானால், அந்தபகவான் பார்வதீ சகிதமாய் உமக்கு தரிசனம் தந்து உமது விருப்பத்தை நிறைவேற்றுவார். இதில் சிறிதும் ச ந் தே க மில்லை. நான் சென்று வருகிறேன். நீர் உமது காரியத்தைப் பார்க்கலாம். (முனிவர் போகின்றார்.)

விரு:—கற்பரசியாகிய சுபவிரதா! நான் மக்களைப் பெறுவதற்காகக் கானகஞ் சென்று, கால காலனைக் குறித்துக் கடுந்தவம்புரியப் போகின்றேன். நீ இங்கே பகவானுடைய சரணங்களே கதியெனக் கொண்டு, காலத்தைக் கழித்துக்கொண்டிரு. நான் வரம்பெற்றுத் திரும்பி வருகின்றேன்.

சுப:—நாதா! நான் தங்கள் கட்டளைப்படி நடக்கத்தவறேன். தாங்கள் வருமளவும் பாலும் பழமுமே ஆகாரமாகக் கொள்வேன். மங்கிலியத்திற்கு அறிகுறியான ஆபரணத்தைத் தவிர, வேறு பூஷணங்களை அணியமாட்டேன். மேன்மைபொருந்திய வுடைகளையும் உடுக்கமாட்டேன் ஆதிமத்யாந்தரகிதனை அனவரதம் தியானித்துக் காலத்தைக் கழிப்பேன். தாங்கள் ஒரு பொழுதும் என்னை மறக்கக் கூடாது.

விரு:—கண்மணி! நான் உன்னை ஒருபொழுதும் மறவேன். போய் வருகிறேன். இறையால் உன்னைக் காத்துக்கொள்.

(போகின்றனர்.)

முதலங்கம முடிந்தது

இரண்டாம் அங்கம்

காட்சி—க.

இடம்: ஓர் தபோவனம். (விருபாக்ஷரும் மகாதேவனும்.)

விரு:—(தனக்குள்) தெய்வமே! நான் வெகுநேரம் நடந்து வந்தும் இன்னும் தபோவனத்தைக் காண்கிலேனே! இதுவரையிலும் நான் நடந்து அறியாதவனுகையால் கால்தளர்ந்து நாவுலர்ந்து தாகம் அதிகமாயிருக்கிறது. காமத்தை மேன்மேலும் பயப்பது இல்லறமென்று நினைத்தே மேலோர் இதைவிட்டுத் துறவறத்தை மேற்கொள்ளுகின்றனர். கொஞ்சமேனும் பற்றில்லாதவனுயினும் வீட்டிலுறைபவனுக்குக் காமம்பனையினும் பெரிதாகின்றது. ஸங்கத்தினுல் காமமுண்டாகுமென்று கூறுவது உண்மையே, ஆயினும் தொடங்கிய காரியத்தை முடிக்க முயல்வதே ஆண்தன்மைக்கு அழகாகும். புத்திரப் பேற்றைப் பெறுவதற்காகவன்ருே முனிவர் பேச்சைக்கேட்டு இக்காரியத்தில் பிரவேசித்தேன். (சுற்றுமுற்றும்பார்த்து) அதோஒருசோலைகாணப்படுகின்றது. அதில் ஒருபொய்கையும் இருக்குமென்றுதெரிகிறது. அங்கேசென்று எனது அநுஷ்டானத்தைமுடித்துக்கொண்டுதவத்திற்குத் தொடங்குவேன். (சோலைக்குச்செல்லுகிருர்.)

மகாதேவன்:—(விருபாக்ஷரைப் பார்த்து வணங்கி) நண்பரே! தாங்கள் ஏது இந்தவழி நடந்துவருகிறீர்கள்? தாங்கள்எப்பொழுதும் நிஷ்டையிலேயே காலங்கழிப்பவர்களாதலால் இவ்வளவுதூரம் வெளியேவந்து போவதற்கு சாவகாசமேது? தாங்களோ ஒருநாழிகை வழிகூட நடந்தறியாதவர்கள். இவ்வளவு தூரம் எப்படி நடந்துவந்தீர்கள்? பூஜை செய்வதும், பகவானை தரிசிப்பதும், அதிதிகளைப் பூஜிப்பதும் தமது வேலையாயிருக்கத்தனிமையில் இவ்வனத்திற்குப் போவதற்குக்காரணம்யாது?

விரு:—அருமை நண்பீர்! மெய்ந்நண்பரிடம் தெரிவிக்கக் கூடாத சமாசாரமும் உண்டோ? ஏனெனில், ஒருவனுக்கு உள்ளத்தில் கவலையேனும் சந்தோஷமேனும் அதிகரித்தபொழுது, நண்பர்களிடம் சொல்லி ஆறுதலடையவேண்டும். துன்பமதிகரித்தபொழுது அத்துன்பத்தை நண்பர்களிடம் சொன்னுல், இயல்பாகவே அது குறைவதோடு, அவர்கள் அதைத் தீர்க்க முடிந்தால் தீர்க்கவும் முடியாவிடில் ஆற்றவுங்கூடுமாதலாலும், சந்தோஷத்தை நண்பர்களிடம் சொன்னுல் அது மேன்மேலும் பெருகுமாதலாலும், துன்ப நிவர்த்திக்கும் இன்பப் பெருக்கிற்

கும் உரியவர் நண்பர்களேயாவர். ஈசுவரன் எனக்குப் பல செல்வங்களை யளித்திருந்தும் புத்திரச்செல்வத்தை யளிக்கவில்லை. ஒருநாள் ஒரு அந்தணர் புசிப்பதற்காக என்வீட்டிற்கு வந்து இலையில் உட்கார்ந்து ஆபோசனம் வாங்குமுன் உமக்கு சந்ததியில்லையா? என்றுகேட்டார். நான்இல்லையென்று சொன்னேன் உடனே அவர்புசிக்கமாட்டேனென்று எழுந்துவிட்டார். நான் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் கேட்கவில்லை. கடைசியில் அவர் நீர் தபோவனத்திற்குச் சென்று கருணாநிதியாகிய கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தால் அவர் உமது விருப்பத்தை நிறைவேற்றுவார் என்று சொல்லிப் போய்விட்டார். அதனால் நான் தபோவனத்திற்குச் சென்று தவஞ் செய்யப்போகிறேன்.

மகா:—ஆமாம், தாங்கள் சொன்னவையாவும் உண்மையே. ஆயினும் இல்லாத விஷயத்திற்கு நாமென்ன செய்வது? மனிதன் தன்விருப்பப்படி காரியத்தைச் செய்து கொள்ளக்கூடியவனல்ல. மனிதனுக்கு ஸ்வாதந்திரியம் கிடையாது. அவனைத்தெய்வம் ஆட்டிவைக்கின்றது. செல்வங்களை மிகுதியாகத் தேடினும் அவைகள் முடிவில் நாசத்தை யடைகின்றன. இந்திரன் முதலிய உயர் பதவியிலிருப்பவர்களும் முடிவில் நழுவி விடுகின்றனர். மனைவி, மக்கள் முதலியோரின் சேர்க்கையும் பிரிவையே முடிவாக வுடைத்தா யிருக்கின்றன உறுதியான தூண்களையுடைய வீடும் காலக்கிரமத்தில் அழிந்து விடுவதுபோல, மனிதர்கள் நரை, திரை, வியாதி முதலியவற்றிற்கு வசப்பட்டு அழிகிறார்கள். சூரிய கிரணங்கள் நீரையுலர்த்துவதுபோல, இராப்பகல்கள் மனிதனின் ஆயுளை உலர்த்துகின்றன. சமுத்திரத்தில் கட்டையும் கட்டையும் சேருவது போலவும், பிரிவதுபோலவும், மனைவிகளும், பிள்ளைகளும், சுற்றத்தாரும் சேர்ந்து பிரிகின்றனர். ஆதலின் பிள்ளையில்லாமைக்காக வருந்துவது அழகாகுமா?

விரு:—மித்திரரே! நீர் சொன்னவையாவும் உண்மையென்பதில் யாதும் ஐயமில்லை. முக்கடன்களையும் ஒழித்த பின்னரே மோக்ஷத்தில் புத்தியைச் செலுத்த வேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். ஆனதால் எவ்வாறாயினும் புத்திரனைப்பெறுவது அவசியமாகும். நான் உத்தேசித்துப் புறப்பட்ட காரியத்தில் ஒரே உறுதியான கருத்துக்கொண் டிருப்பதனால், என் பயணத்தை இடையில் நிறுத்திவிட்டுத் திரும்புவதில் நான் இஷ்டப்படவில்லை. நான் இத்தபோவனத்தில் சிவபெருமானைக் குறித்துத்தவஞ்செய்து, என்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறேன். தாங்கள் என்னைத் தடுக்காமல் போய்வருமாறு வேண்டுகிறேன்

(இன்னும் வரும்)

M. M. நாராயணசாமி அய்யர்.

விண்ணப்பம்

நமது சிந்தாமணியின் மூன்றும் ஆண்டு அடுத்த சஞ்சிகையோடு ஆரம்பப் பெறுகிறது. இது காறும் இதனைப்போற்றிஆதரித்து வரும் அன்புடையாளர் இது மாதந்தோறும் பல பல அரிய பெரிய விஷயங்களைத் தன்னகத்தே தாங்கிவருகிறதென்றும், இதனால் நந்தமிழ் மககளுக்குப் பெரும்பயன் விளையக்கிடக்கிறதென்றும் மதிதோறும் எண்ணிறந்த சிறப்புரைகள் வரைந்து வருகின்றனர். அவற்றுள் மிகச சிலவற்றை மாத்திரமே சில சஞ்சிகைகளில் பதித்துள்ளோம். எஞ்சியவை சிந்தாமணியின் சிறப்பை சீரியருணர்தற்கு ஒன்றிரண்டே சாலுமென விடுத்தாம். யாம் மேற்போந்த இவ்வரும் பெருங்காரியம் எம் பொருட்டே யன்றி எமது கடைப்பட்ட அறிவாற்றலுக் கமைந்தமட்டில் நம்பண்டைப் பசுந்தமிழுக் குழைப்பான் எண்ணியேயாம். முற்றிய உள்ளன்போடு யாம் புரியும் இத்தினையினுஞ் சிறிய ஊழியம் ஒரு சிலர்க்கேனும் பயனுடைத்தா யிருக்கின்றதென அறியப்பெற்றமையின் எமக்குள்ள மகிழ்ச்சி குறைந்தன்று. காகிதம் முதலியன பன் மடங்கு அதிகப்பட்டுள்ள இக்காலத்து பத்திரிகைத் தொழில் நடத்துவது மிகச்சிரம மாதலின் இக்காலத்தில் தான் தமிழ் மக்கள் தம்பொருமை தங்கிய பாஷைக்குப்போதிய ஆதரவு காட்டவேண்டுவதுமிக அவசியமாம். அகவே நமதுசிந்தாமணி காலத்தால்நேரும் பல இன்னல்களுக்கெல்லாம் இடைப்படாதுநின்று தன்சிறு ஊழியத்தைசசெய்துவரஇப்போதுள்ளஅபிமானிகள் தம்ஆதரவைப் பெருக்கிவரவும் மற்றும் தம் நண்பர் பலரையும் ஆதரிக்கத் தூண்டுமாறும் ஒவ்வொருவரையும் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதல் வருஷத்தில் சந்தா சேர்ந்த நண்பர்களில் சிலரொழிந்த பலரும் இதுகாறும் தொடர்ந்து ஆதரித்து வருவதாலும் இரண்டாம் ஆண்டில் சந்தித்த நண்பர்களில் பலரும்முதலாண்டுப் புத்தகத்தையும் வாங்கியதோடு மூன்றும் ஆண்டிலும்ஆதரித்து வருவதாலும் நமது பத்திரிகை யாவரையும் திருப்திசெய்வித்து அவர் தம் நன்மதிப்பை மிகுதியும் பெற்றிருக்கிறதென்பது வெளியாகிறது. ஆகவே வரப்போகிற நான்காம் ஆண்டில் இப்போது ஆதரித்துவரும் ஒவ்வொருவரும் வழக்கம் போல் தொடர்ந்து ஆதரித்து வருவார்களெனவும் தம் நண்பரில் ஒருவரையேனும் ஒவ்வொருவரும் அதிகப்படுத்தி நமதுசிந்தாமணி இப்போதுள்ள காகிதப் பஞ்சத்தில் சிக்கி இன்னலுறுவண்ணம் காத்து அபிவிருத்தி செய்வார்களெனவும் எதிர்பார்க்கிறோம் அங்ஙனமே திருவருள் கூட்டுமாக.

பத்திராதிபர்.